# மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

மிக முக்கியமான விதிமுறைகள் & நிபந்தனைகள் மற்றும் இங்கு உள்ள அனைத்து தகவல்களும் அனைத்து கிரெடிட் கார்டு வைத்திருப்பவர்கள் / கிரெடிட் கார்டுகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் / வங்கியின் வாடிக்கையாளர்கள் / வங்கியின் கிரெடிட் கார்டு திட்டத்தில் ஆர்வத்தை வெளிப்படுத்தும் பொது மக்களுக்கு உடனடியாக பொருந்தும். MITC மாற்றத்திற்கு உட்பட்டது. கூறப்பட்ட MITC வங்கியின் கார்டு வைத்திருப்பவர் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் சேர்த்தும் கூடுதலாகவும் படிக்கப்பட வேண்டும்.

## A) கட்டணங்களின் அட்டவணை

### 1. சேர்தல், வருடாந்திர & ஆட்-ஆன் (கூடுதல்) கார்டு கட்டணம்

| கிரெடிட் கார்டு வகை | சேர்தல் கட்டணம் (ரூ.) | வருடாந்திர கட்டணம் 2ஆம் ஆண்டிலிருந்து (ரூ.) | ஆட்-ஆன் (கூடுதல்) கார்டு |
|---|---|---|---|
| ஆக்சிஸ் பேங்க் இன்ஃபினிட் கிரெடிட் கார்டு | ஒன்றுமில்லை (nil) | ஒன்றுமில்லை (nil) | ஒன்றுமில் லை (nil) |
| ஆக்சிஸ் பேங்க் பஸ் (Buzz) கிரெடிட் கார்டு | 750 | 750 | ஒன்றுமில் லை (nil) |
| இந்தியன் ஆயில் ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்டு | 500 | 500 | ஒன்றுமில் லை (nil) |
| ஃப்ளிப்கார்ட் ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்டு | 500 | 500 | ஒன்றுமில் லை (nil) |
| ஆக்சிஸ் பேங்க் ஃப்ரீசார்ஜ் கிரெடிட் கார்டு | 250 | 250 | ஒன்றுமில் லை (nil) |

| | | | |
|---|---|---|---|
| ஆக்சிஸ் பேங்க் ஃப்ரீசார்ஜ் பிளஸ் கிரெடிட் கார்டு | 350 | 350 | ஒன்றுமில்லை (nil) |
| ஆக்சிஸ் பேங்க் ஏஸ் கிரெடிட் கார்டு | 499 (கார்டு அமைத்த 45 நாட்களுக்குள் ரூ.10000 செலவு செய்தால் விலக்கு அளிக்கப்படும்) | 499 (முந்தைய ஆண்டில் ரூ.2,00,000 செலவு செய்திருந்தால் விலக்கு அளிக்கப்படும்) | ஒன்றுமில்லை (nil) |
| செலக்ட் கிரெடிட் கார்டு | 3,000 (பர்கண்டி அக்கவுண்ட் வைத்திருப்பவர்களுக்கு ஒன்றுமில்லை (nil)) | 3,000 (பர்கண்டி அக்கவுண்ட் வைத்திருப்பவர்களுக்கு ஒன்றுமில்லை (nil)) | ஒன்றுமில்லை (nil) |
| ஆக்சிஸ் பேங்க் அட்லஸ் கிரெடிட் கார்டு | 5,000 | 5,000 | ஒன்றுமில்லை (nil) |
| ஆக்சிஸ் பேங்க் பர்கண்டி பிரைவேட் கிரெடிட் கார்டு | 50,000 (பர்கண்டி பிரைவேட் அக்கவுண்ட் வைத்திருப்பவர்களுக்கு ஒன்றுமில்லை (nil)) | 50,000 (பர்கண்டி பிரைவேட் அக்கவுண்ட் வைத்திருப்பவர்களுக்கு ஒன்றுமில்லை (nil)) | ஒன்றுமில்லை (nil) |
| ஆக்சிஸ் பேங்க் ரிஸர்வ் கிரெடிட் கார்டு | 50,000 | 50,000 | ஒன்றுமில்லை (nil) |
| ஆக்சிஸ் பேங்க் மேக்னஸ் கிரெடிட் கார்டு | 10,000 | 10,000 | ஒன்றுமில்லை (nil) |

| | | | |
|---|---|---|---|
| ஆக்சிஸ் பேங்க் விஸ்தாரா இன்ஃபினிட் கிரெடிட் கார்டு | 10,000 | 10,000 | ஒன்றுமில்லை (nil) |
| ஆக்சிஸ் பேங்க் விஸ்தாரா சிக்நேச்சர் கிரெடிட் கார்டு | 3,000 | 3,000 | ஒன்றுமில்லை (nil) |
| ஆக்சிஸ் பேங்க் விஸ்தாரா கிரெடிட் கார்டு | 1,500 | 1,500 | ஒன்றுமில்லை (nil) |
| ப்ரிவிலேஜ் கிரெடிட் கார்டு | 1,500 | 1,500 | ஒன்றுமில்லை (nil) |
| மைல்ஸ் & மோர் வேர்ல்ட் செலக்ட் கிரெடிட் கார்டு | 10,000 | 4,500 | ஒன்றுமில்லை (nil) |
| மைல்ஸ் & மோர் வேர்ல்ட் கிரெடிட் கார்டு | 3,500 | 3,500 | ஒன்றுமில்லை (nil) |
| நியோ | 250 | 250 | ஒன்றுமில்லை (nil) |
| ஆக்சிஸ் பேங்க் ஆரா (Aura) கிரெடிட் கார்டு | 749 | 749 | ஒன்றுமில்லை (nil) |
| LIC கார்டுகள் | ஒன்றுமில்லை (nil) | ஒன்றுமில்லை (nil) | ஒன்றுமில்லை (nil) |
| பயண நன்மைகளுடன் சிக்நேச்சர் | 1,500 | 1,000 (முந்தைய ஆண்டில் 2.4 லட்சம் செலவின வரம்பை அடைந்திருந்தால் | ஒன்றுமில்லை (nil) |

| | | | |
|---|---|---|---|
| | | விலக்கு அளிக்கப்படும்) | |
| மை விங்ஸ் | 1,200 | 500 | ஒன்றுமில்லை (nil) |
| மை சாய்ஸ் | 250 (பட கார்டுக்கான கட்டணம் கூடுதலாக ரூ. 150) | 250 | ஒன்றுமில்லை (nil) (பட கார்டுக்கான கட்டணம் ரூ. 150) |
| மை ஸோன் (Zone) | 500 | 500 | ஒன்றுமில்லை (nil) |
| மை பிஸினஸ் | 999 | 499 | ஒன்றுமில்லை (nil) |
| ப்ளாட்டினம் | 500 (கார்டு அமைத்த 45 நாட்களுக்குள் ரூ. 5,000 செலவு செய்தால் விலக்கு அளிக்கப்படும்) | 200 (முந்தைய ஆண்டில் ரூ.1,00,000 செலவு செய்திருந்தால் விலக்கு அளிக்கப்படும்) | ஒன்றுமில்லை (nil) |
| டைட்டேனியம் | 250 (கார்டு அமைத்த 45 நாட்களுக்குள் ரூ. 2,500 செலவு செய்தால் விலக்கு அளிக்கப்படும்) | 100 (முந்தைய ஆண்டில் ரூ.50,000 செலவு செய்திருந்தால் விலக்கு அளிக்கப்படும்) | ஒன்றுமில்லை (nil) |
| மை ஸோன் ஈஸி கார்டு | 500 | 500 | ஒன்றுமில்லை (nil) |
| ப்ரைட் ப்ளாட்டினம் | ஒன்றுமில்லை (nil) | 250 (முந்தைய ஆண்டில் ரூ.20,000 செலவு செய்திருந்தால் | ஒன்றுமில்லை (nil) |

| | | | |
|---|---|---|---|
| | | விலக்கு அளிக்கப்படும்) | |
| ப்ரைட் சிக்நேச்சர் | ஒன்றுமில்லை (nil) | 500 (முந்தைய ஆண்டில் ரூ.40,000 செலவு செய்திருந்தால் விலக்கு அளிக்கப்படும்) | ஒன்றுமில் லை (nil) |

## 2. நிதி / வட்டி கட்டணம் (ஜூன் 12, 2021 முதல் அமலுக்கு வந்தது)

| ஆக்சிஸ் பேங்க் கார்டு வேரியண்ட் | நீட்டிக்கப்பட்ட கிரெடிட் மீதான தவணை கடந்த வட்டி | | ரொக்கப்பண முன்பணத்திற்கான (கேஷ் அட்வான்ஸ்) வட்டி | |
|---|---|---|---|---|
| | மாதாந்திர விகிதம் | வருடாந்திர விகிதம் | மாதாந்திர விகிதம் | வருடாந்திர விகிதம் |
| ஆக்சிஸ் பேங்க் பர்கண்டி பிரைவேட் கிரெடிட் கார்டு | 1.5% | ஆண்டுக்கு 19.56% | 1.5% | ஆண்டுக்கு 19.56% |
| ப்ரைட் ப்ளாட்டினம், ப்ரைட் சிக்நேச்சர் கார்டு | மாதத் திற்கு 2.95% | ஆண்டுக்கு 41.75% | மாதத்திற் கு 2.95% | ஆண்டுக்கு 41.75% |

| | | | | |
|---|---|---|---|---|
| ப்ரிவிலேஜ் / ஆக்சிஸ் பேங்க் செலக்ட் கிரெடிட் கார்டு / ஆக்சிஸ் பேங்க் அட்லஸ் கிரெடிட் கார்டு / மைல்ஸ் & மோர் வேர்ல்ட் செலக்ட் கார்டு / மைல்ஸ் & மோர் வேர்ல்ட் கார்டு / மை ஸோன் / மை சாய்ஸ் / மை விங்ஸ் / ஆக்சிஸ் பேங்க் விஸ்தாரா சிக்நேச்சர் கிரெடிட் கார்டு / ஆக்சிஸ் பேங்க் விஸ்தாரா கிரெடிட் கார்டு / ப்ளாட்டினம் / டைட்டேனியம் / நியோ / பஸ் (Buzz) /கோல்டு/சில்வர்/ இந்தியன் ஆயில் ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்டு / ஆக்சிஸ் பேங்க் விஸ்தாரா இன்ஃபினிட் கிரெடிட் கார்டு / ஆக்சிஸ் பேங்க் ஆரா (Aura) கிரெடிட் கார்டு / LIC கார்டு | மாதத் திற்கு 3.6% | ஆண்டுக்கு 52.86% | மாதத்திற் கு 3.6% | ஆண்டுக்கு 52.86% |
| ஆக்சிஸ் பேங்க் ரிஸர்வ் கிரெடிட் கார்டு / ஆக்சிஸ் பேங்க் மேக்னஸ் கிரெடிட் கார்டு | மாதத் திற்கு 3.0% | ஆண்டுக்கு 42.58% | மாதத்திற் கு 3.0% | ஆண்டுக்கு 42.58% |
| ஃப்ளிப்கார்ட் ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்டு | மாதத் திற்கு 3.6% | ஆண்டுக்கு 52.86% | மாதத்திற் கு 3.6% | ஆண்டுக்கு 52.86% |

| | | | | |
|---|---|---|---|---|
| / ஆக்சிஸ் பேங்க் ஃப்ரீசார்ஜ் கிரெடிட் கார்டு / ஆக்சிஸ் பேங்க் ஃப்ரீசார்ஜ் ப்ளஸ் கிரெடிட் கார்டு / ஆக்சிஸ் பேங்க் ACE கிரெடிட் கார்டு | | | | |
| இன்ஸ்டா ஈஸி கார்டு / மை ஸோன் ஈஸி கார்டு / ப்ரிவிலேஜ் ஈஸி கார்டு | மாதத் திற்கு 3.4% | ஆண்டுக்கு 49.36% | மாதத்திற் கு 3.4% | ஆண்டுக்கு 49.36% |

**நிதி / வட்டி கட்டண விவரங்கள்:**

1) பின்வரும் நிலைகளில் வட்டி விதிக்கப்படும்;
   - செலுத்த வேண்டிய மொத்தத் தொகை, பணம் செலுத்த வேண்டிய தேதிக்குள் செலுத்தப்படாவிட்டால், முந்தைய நிலுவைத் தொகைகள் முழுமையாக செலுத்தப்படும் வரை, மொத்த நிலுவைத் தொகை மற்றும் அனைத்து புதிய பரிவர்த்தனைகளுக்கும் (பரிவர்த்தனை தேதியிலிருந்து) வட்டி விதிக்கப்படும்.
   - பணமெடுக்கும் தேதியிலிருந்து பணம் செலுத்தும் தேதி வரை அனைத்து ரொக்கப்பண முன்பணங்களுக்கும்
   - பணம் செலுத்த வேண்டிய தேதிக்குப் பிறகு செலுத்த வேண்டிய குறைந்தபட்சத் தொகை செலுத்தப்படாவிட்டால், காலம் கடந்து செலுத்துவதற்கான கட்டணம் / வட்டி விதிக்கப்படும்
   - பிற கிரெடிட் கார்டு கணக்குகளில் இருந்து இருப்பு பரிமாற்றங்கள் இருக்கும்பட்சத்தில், வங்கியாளரின் காசோலை / NEFT வழங்கப்பட்ட தேதியிலிருந்து, மாற்றப்பட்ட தொகை மற்றும் உங்கள் கார்டு கணக்கில் நிலுவையில் உள்ள எந்தவொரு பர்சேஸ் தொகையின் மீது நிதிக் கட்டணங்கள் உடனடியாக சிறுகச் சிறுகச் சேரும்.

2) கார்டு கணக்கு முடிக்கப்பட்ட பிறகும், கார்டில் உள்ள நிலுவைத் தொகை முழுமையாக செலுத்தப்படும் வரை, மேலே குறிப்பிட்டுள்ள நிதிக் கட்டணங்கள் தொடர்ந்து செலுத்தப்பட வேண்டும்.

3) பிற கட்டணங்கள் & செலவுகள்

| | |
|---|---|
| ரொக்கப் பணமெடுத்தலுக்கான கட்டணங்கள்** | ரொக்கப் பண தொகையின் 2.5% (குறைந்தபட்சம். ரூ 500);<br>ஆக்சிஸ் பேங்க் பர்கண்டி பிரைவேட், ரிஸர்வ் & மேக்னஸ் கிரெடிட் கார்டுக்கு விலக்கு அளிக்கப்பட்டது |
| கிளைகளில் ரொக்கப் பணம் செலுத்துவதற்கான கட்டணம் | ரூ. 100<br>பர்கண்டி பிரைவேட் கிரெடிட் கார்டுக்கு விலக்கு அளிக்கப்பட்டது |
| கார்டு மாற்றுக் கட்டணம் | ரூ.100<br>ஆக்சிஸ் பேங்க் ஏஸ் கிரெடிட் கார்டு, ஆக்சிஸ் பேங்க் விஸ்தாரா இன்ஃபினிட் கிரெடிட் கார்டு<br>, ஆக்சிஸ் பேங்க் விஸ்தாரா சிக்நேச்சர் கிரெடிட் கார்டு<br>, ஆக்சிஸ் பேங்க் விஸ்தாரா கிரெடிட் கார்டு<br>, மேக்னஸ், மற்றும் ரிஸர்வ் கிரெடிட் கார்டு<br>, பர்கண்டி பிரைவேட் கிரெடிட் கார்டு<br>, ஆக்சிஸ் பேங்க் ஆரா (Aura) கிரெடிட் கார்டு<br>, ஆக்சிஸ் பேங்க் அட்லஸ் கிரெடிட் கார்டு ஆகியவற்றுக்கு விலக்கு அளிக்கப்பட்டது |
| நகல் ஸ்டேட்மெண்ட் கட்டணம் | விலக்கு அளிக்கப்பட்டது |
| பர்கண்டி பிரைவேட் கிரெடிட் கார்டுக்கு காலம் கடந்து செலுத்துவதற்கான கட்டணம் | விலக்கு அளிக்கப்பட்டது |
| ஆக்சிஸ் பேங்க் ஏஸ் கிரெடிட் கார்டுக்கு காலம் கடந்து செலுத்துவதற்கான கட்டணம் | செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூ 100க்கு குறைவாக இருந்தால் - ஒன்றுமில்லை (nil) |

| | |
|---|---|
| | செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூ. 101 - ரூ. 300க்கு இடையில் இருந்தால் - ரூ. 100 |
| | செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூ. 301 - ரூ. 1,000 க்கு இடையில் இருந்தால் - ரூ. 300 |
| | செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூ. 1,001 - ரூ. 5,000 க்கு இடையில் இருந்தால் - ரூ. 500 |
| | செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூ. 5,001 - ரூ. 10,000 க்கு இடையில் இருந்தால் - ரூ. 600 |
| | செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூ 10,001 மற்றும் அதற்கு மேல் இருந்தால் - ரூ. 700 |
| பிற கார்டுகளுக்கு காலம் கடந்து செலுத்துவதற்கான கட்டணம் | செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூ. 300 என்றால் - ஒன்றுமில்லை (nil) |
| | செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூ. 301 மற்றும் ரூ. 500 க்கு இடையில் இருந்தால் - ரூ. 100 |
| | செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூ. 501 மற்றும் ரூ.1000 க்கு இடையில் இருந்தால் - ரூ. 500 |
| | செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூ.1001 மற்றும் ரூ.10,000 க்கு இடையில் இருந்தால் - ரூ. 500 |
| | செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூ.10,001 மற்றும் ரூ.25,000 க்கு இடையில் இருந்தால் - ரூ. 750 |
| | செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூ.25,001 மற்றும் ரூ.50,000 க்கு இடையில் இருந்தால் - ரூ. 1,000 |
| | செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூ.50,000க்கு மேல் இருந்தால் - ரூ. 1,000 |

| | |
|---|---|
| ஆக்சிஸ் பேங்க் ஏஸ் கிரெடிட் கார்டுக்கு ஓவர்-லிமிட் அபராதம்*** | வரம்புக்கு அதிகமான தொகையின் 3% (குறைந்தபட்சம். ரூ. 500) |
| பிற ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்டுகளுக்கு ஓவர்-லிமிட் அபராதம் *** | வரம்புக்கு அதிகமான தொகையின் 2.5% (குறைந்தபட்சம். ரூ 500)<br>பர்கண்டி பிரைவேட் கிரெடிட் கார்டுக்கு விலக்கு அளிக்கப்பட்டது |
| சார்ஜ் ஸ்லிப் மீட்டெடுப்பு கட்டணம் அல்லது நகல் கோரிக்கை கட்டணம் | விலக்கு அளிக்கப்பட்டது |
| வெளியூர் காசோலை கட்டணம் | விலக்கு அளிக்கப்பட்டது |
| திருப்பி அனுப்பப்பட்ட அல்லது ஏற்கப்படாத காசோலை கட்டணம் அல்லது ஆட்டோ டெபிட் ரிவர்ஸல் (வங்கி A/c இல் பணம் இல்லை) | செலுத்த வேண்டிய தொகையின் 2% குறைந்தபட்சம் ரூ.450, அதிகபட்சம் ரூ. 1,500,க்கு உட்பட்டு பர்கண்டி பிரைவேட் கிரெடிட் கார்டுக்கு விலக்கு அளிக்கப்பட்டது |
| ரயில்வே டிக்கெட்டுகளை வாங்கும்போது அல்லது ரத்து செய்யும்போது கூடுதல் கட்டணம் | IRCTC / இந்திய இரயில்வே பரிந்துரைத்தபடி |
| எரிபொருள் பரிவர்த்தனை கூடுதல் கட்டணம் | பரிவர்த்தனை தொகையின் 1% (ரூ. 400 முதல் ரூ. 4,000 வரையிலான எரிபொருள் பரிவர்த்தனைகளுக்குத் ரீஃபண்ட் செய்யப்படும்.<br>அதிகபட்ச நன்மைகள் மாதத்திற்கு ரூ. 400 வரை; ரூ. 250 வரை ப்ரைட் பிளாட்டினத்திற்கு மட்டும்.<br>மை சாய்ஸ், நியோ, பஸ் (Buzz), ஆக்சிஸ் பேங்க் விஸ்தாரா கிரெடிட் கார்டு & ஆக்சிஸ் பேங்க் விஸ்தாரா சிக்நேச்சர் கிரெடிட் கார்டு ஆகியவற்றிற்கு ரீஃபண்ட் பொருந்தாது) |

| | |
|---|---|
| | எரிபொருள் கூடுதல் கட்டணத்திற்கு விதிக்கப்படும் வரிகள் (ஏதேனும் இருந்தால்) விலக்கு அளிக்கப்படாது மற்றும் கார்டு வைத்திருப்பவரால் ஏற்கப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும். |
| அந்நிய செலாவணி பரிவர்த்தனை கட்டணம்**** | ஆக்சிஸ் பேங்க் மேக்னஸ் கிரெடிட் கார்டுக்கு பரிவர்த்தனை மதிப்பில் 2%;<br><br>ஆக்சிஸ் பேங்க் ரிஸர்வ் கிரெடிட் கார்டுக்கு பரிவர்த்தனை மதிப்பில் 1.5%;<br><br>பர்கண்டி பிரைவேட்டிற்கு ஒன்றுமில்லை (nil);<br><br>மற்ற அனைத்து கார்டுகளுக்கும் பரிவர்த்தனை மதிப்பில் 3.50% |
| பரிவர்த்தனைகளுக்கான மொபைல் விழிப்பூட்டல்கள் | விலக்கு அளிக்கப்பட்டது |
| ஹாட் லிஸ்டிங் கட்டணங்கள் | விலக்கு அளிக்கப்பட்டது |
| இருப்பு விசாரணைக் கட்டணம் | விலக்கு அளிக்கப்பட்டது |

குறிப்பு: i) இந்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட GST, அனைத்து கட்டணங்கள், வட்டி மற்றும் பிற கட்டணங்களுக்கும் பொருந்தும், மேலும் இந்திய அரசின் தொடர்புடைய ஒழுங்குமுறைகளின்படி மாற்றத்திற்கு உட்பட்டது.

ii) வாடிக்கையாளருக்கு குறைந்தபட்சம் ஒரு மாதமாவது உரிய அறிவிப்புடன், அவ்வப்போது ஏதேனும் செலவுகள் அல்லது கட்டணங்களை மாற்றுவதற்கு அல்லது ஏதேனும் புதிய செலவுகள் அல்லது கட்டணங்களை, பொருந்தும் வகையில், அறிமுகப்படுத்துவதற்கான உரிமை வங்கிக்கு உள்ளது.

* **காலம் கடந்து பணம் செலுத்துவதற்கான கட்டணம்**: பணம் செலுத்தப்படாமல் இருந்தாலோ அல்லது செலுத்த வேண்டிய தேதிக்குள் குறைந்தபட்சத் தொகையை விடக் குறைவாக பணம் செலுத்தப்பட்டிருந்தாலோ கார்டு வைத்திருப்பவரிடம் காலம் கடந்து செலுத்துவதற்கான கட்டணம் வசூலிக்கப்படும். காலம் கடந்து செலுத்துவதற்கான கட்டணத்தைத் தவிர்க்க, பணம் செலுத்த வேண்டிய தேதி அன்று அல்லது அதற்கு முன் ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்டு கணக்கில் க்ளியர் ஃபண்ட்ஸ் வரவு வைக்கப்பட வேண்டும்.

**ரொக்கப்பணமெடுத்தல் (கேஷ் வித்ட்ராவல்) கட்டணம்**: கார்டு வைத்திருப்பவர், கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பித்த போது தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களின் பயன்பாட்டு விருப்பத்தைப் பொறுத்து, குறிப்பிட்ட ATMகளுடனான ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்டின் இணக்கத்தன்மைக்கு ஏற்ப இந்தியா அல்லது வெளிநாடுகளில் உள்ள ATMகளில் இருந்து பணமெடுக்க ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்டைப் பயன்படுத்தலாம். அத்தகைய பணமெடுத்தல்களுக்கு மேலே குறிப்பிடப்பட்ட கட்டணங்களின்படி பரிவர்த்தனைக்கான கட்டணம் விதிக்கப்படும் மற்றும் கார்டு வைத்திருப்பவருக்கு அடுத்த ஸ்டேட்மெண்ட்டில் பில் செய்யப்படும். இந்தக் கட்டணங்கள் வங்கிக் கட்டணங்கள் மட்டுமே. சில ATMகள் பணம் பணமெடுத்தலுக்கான கட்டணங்களை விதிக்கும், அவை வங்கியுடன் தொடர்புடையவை அல்ல.

*****அளவுக்கதிக-வரம்பு (ஓவர்-லிமிட்) கட்டணம்**: கிரெடிட் வரம்பை விட அதிகமான கிரெடிட் தொகை உள்ள சில பரிவர்த்தனைகளுக்கு வங்கி ஒப்புதல் அளிக்கலாம் கார்டு வைத்திருப்பவர் அதை மீற முயற்சிக்கும் போது, ஓவர்-லிமிட் தொகையின் 2.5% (குறைந்தபட்சம் ரூ 500க்கு உட்பட்டு) ஓவர்-லிமிட் கட்டணமாக வசூலிக்கப்படும். கட்டணங்கள் அல்லது வட்டிக் சார்ஜ்கள் காரணமாக ஓவர்-லிமிட் நிலை ஏற்படலாம்.

******அந்நிய செலாவணியில் கட்டணங்கள்**: இந்திய ரூபாய் அல்லாத வேறு செலாவணி நாணயத்தில் பரிவர்த்தனை செய்தால், அந்த பரிவர்த்தனை இந்திய ரூபாயாக மாற்றப்படும். ஆக்சிஸ் பேங்குடன் பரிவர்த்தனை செட்டில் செய்யப்பட்ட தேதியில் மாற்றம் நடைபெறும், இது பரிவர்த்தனை செய்யப்பட்ட அதே நாளன்று இல்லாமல் இருக்கலாம். பரிவர்த்தனை அமெரிக்க டாலரில் இல்லை என்றால், அமெரிக்க டாலர்கள் மூலம், வசூலிக்கப்படும் தொகையை அமெரிக்க டாலராக மாற்றி, பின்னர் அமெரிக்க டாலர் தொகையை இந்திய ரூபாயாக மாற்றுவதன் மூலம் மாற்றப்படும். பொருந்தக்கூடிய சட்டத்தின்படி ஒரு குறிப்பிட்ட விகிதம் தேவைப்படாவிட்டால், அமெரிக்க டாலரில் இருந்து இந்திய ரூபாயாக மாற்றும் விகிதம், VISA / மாஸ்டர்கார்டு வழங்கும் விகிதத்தில் இருக்கும், செட்டில்மென்ட் தேதியில், அத்தகைய பரிவர்த்தனைகளில் செலாவணி நாணய மாற்றக் காரணி மதிப்பீட்டால் (தற்போது 3.50%) அதிகரிக்கலாம்.

வாடிக்கையாளரால் தொடங்கப்பட்ட அத்தகைய வெளிநாட்டு பரிவர்த்தனையின் ரீஃபண்ட்டுக்கு கூடுதலாக 3.5% கட்டணம் பொருந்தும்.

**வட்டி கணக்கீட்டிற்கான எடுத்துக்காட்டு:**
முந்தைய பாக்கிகள் அனைத்தையும் நீங்கள் முழுமையாகச் செலுத்திவிட்டீர்கள் என்றும், உங்கள் கிரெடிட் கார்டு அக்கவுண்டில் எந்தத் தொகையும் நிலுவையில் இல்லை மற்றும் உங்கள் மாதாந்திர ஸ்டேட்மெண்ட் ஒவ்வொரு மாதமும் 20 ஆம் தேதி உருவாக்கப்படும் என்றும் வைத்துக்கொள்வோம்.

ஜூன் 12ஆம் தேதி ரூ.25000க்கு வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கியுள்ளீர்கள், ஜூன் 15ஆம் தேதி ATM இலிருந்து ரூ.5,000 ரொக்கப்பணம் எடுத்தீர்கள் (கேஷ் வித்ட்ராவல்).

| **தேதி** | **பரிவர்த்தனை வகை** | **தொகை** | **விளக்கம்** |
|---|---|---|---|
| ஜூன் 12 | பர்சேஸ் | ரூ .25,000 Dr | கிரெடிட் கார்டு மூலம் செய்த பர்சேஸ் |
| ஜூன் 15 | ரொக்கப்பண மெடுத்தல் (கேஷ் வித்ட்ராவல்) | ரூ .5,000 Dr | கிரெடிட் கார்டு மூலம் செய்த ரொக்கப்பணமெடுத்தல் (கேஷ் வித்ட்ராவல்) |
| ஜூன் 20 | வட்டி | ரூ 35.50 Dr | எடுக்கப்பட்ட ரொக்கப்பணம் (கேஷ் வித்ட்ராவல்) ரூ . 5,000* 6 நாட்கள்* 3.6%*12 மாதங்கள்/365 நாட்கள் = ரூ . 35.50 |
| ஜூன் 20 | ரொக்கப்பண (கேஷ்) பரிவர்த்தனை கட்டணம் | ரூ .500 Dr | 5000*2.5% = ரூ . 125 இது ரூ . 500ஐ விட குறைவானது |
| ஜூன் 20 | வட்டிக்கான GST | ரூ .6.39 Dr | 35.50*18% = ரூ .6.39 |

| | | | |
|---|---|---|---|
| ஜூன் 20 | கட்டணத்திற்கான GST | ரூ .90.00 Dr | 500*18% = ரூ .90 |
| **முடிவு இருப்பு** | | **ரூ .30,631.89 Dr** | **செலுத்த வேண்டிய மொத்த கட்டணம்** |

ஜூன் 20ஆம் தேதி உருவாக்கப்பட்ட உங்கள் மாதாந்திர ஸ்டேட்மெண்ட்டில் பின்வரும் உள்ளீடுகள் இருக்கும்

தனிப்பட்ட பர்சேஸ் மற்றும் ரிவால்வ் போக்கு மற்றும் பொருந்தக்கூடிய வட்டி விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் உண்மையான வட்டி கணக்கீடு மாறுபடும். ஜூன் 20ஆம் தேதி ஸ்டேட்மெண்ட்டுக்கு நீங்கள் ஜூலை 10ஆம் தேதி பணம் செலுத்த வேண்டும். நீங்கள் ஜூலை 10ஆம் தேதி ரூ.5000 செலுத்தி, ஜூலை 11ஆம் தேதி ரூ.10,000 க்கு பர்சேஸ் செய்தால், ஜூலை 20ஆம் தேதி உருவாக்கப்படும் உங்கள் மாதாந்திர ஸ்டேட்மெண்ட்டில் உள்ளீடுகள் பின்வருமாறு இருக்கும்:

| **தேதி** | **பரிவர்த்தனை வகை** | **தொகை** | **விளக்கம்** |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | ரூ 30,631.89 Dr | முந்தைய ஸ்டேட்மெண்ட்டிலிருந்து முன் கொண்டு வரப்பட்ட இருப்பு |
| ஜூலை 10 | பேமெண்ட் | ரூ. 5,000 Cr | முந்தைய ஸ்டேட்மெண்ட் நிலுவைத் தொகைக்கான கட்டணம் |
| ஜூலை 11 | பர்சேஸ் | ரூ. 10,000 Dr | கிரெடிட் கார்டு மூலம் செய்யப்பட்ட பர்சேஸ் |
| ஜூலை 20 | வட்டி | ரூ. 1,413.85 Dr | ரூ 1,413.85 குறித்த விவரக் கூறுகள்: |

a) ஜூன் 12ஆம் தேதி முதல் ஜூலை 20ஆம் தேதி வரை (39 நாட்கள்) ரூ. 25,000 க்கு மாதத்திற்கு @ 3.6% வட்டி [ரூ. 25,000 x 3.6% x 39 நாட்கள் x 12 மாதங்கள் / 365 நாட்கள் = ரூ. 1153.97].

b) ஜூன் 21 ஆம் தேதி முதல் ஜூலை 10 ஆம் தேதி வரை (20 நாட்கள்) ரூ. 5,000 க்கு மாதத்திற்கு @ 3.6% வட்டி [5000 x

3.6% x 20 நாட்கள் x 12 மாதங்கள் / 365 நாட்கள் = ரூ. 118.36].

c) ஜூலை 11 ஆம் தேதி முதல் ஜூலை 20 ஆம் தேதி வரை (10 நாட்கள்) ரூ. 10,000 க்கு மாதத்திற்கு @ 3.6% வட்டி [ரூ. 10,000 x 3.6% x 10 நாட்கள் x 12 மாதங்கள் / 365 நாட்கள் = 118.36].

d) ஜூன் 20 ஆம் தேதி முதல் ஜூலை 20 ஆம் தேதி வரை (31 நாட்கள்) 631.39 க்கு வட்டி (வட்டி + பரிவர்த்தனை கட்டணம் + கடைசி ஸ்டேட்மெண்ட்டில் விதிக்கப்பட்ட வரி) மாதத்திற்கு @ 3.6% [ரூ. 631.39 x 3.6% x 31 நாட்கள் x 12 மாதங்கள் / 365 நாட்கள் = ரூ. 23.16].

| | | | |
|---|---|---|---|
| ஜூலை 20ஆம் தேதி | GST | ரூ. 254.49 Dr | ரூ. 1,413.85*18% = ரூ. 254.49 |
| **முடிவு இருப்பு** | | **ரூ. 37300.23 Dr** | **செலுத்த வேண்டிய மொத்த கட்டணம்** |

தனிப்பட்ட பர்சேஸ் மற்றும் ரிவால்வ் போக்கு மற்றும் பொருந்தக்கூடிய வட்டி விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் உண்மையான வட்டி கணக்கீடு மாறுபடும். ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச கட்டணத்தை மட்டும் செலுத்தினால், உங்கள் நிலுவைத் தொகைக்கான வட்டி செலுத்துதலுடன், பல ஆண்டுகளுக்கு திருப்பிச் செலுத்தும் நிலை ஏற்படும்.

**பர்கண்டி ப்ரைவேட்-ற்கான வட்டி கணக்கீடுக்கான எடுத்துக்காட்டு:**

முந்தைய பாக்கிகள் அனைத்தையும் நீங்கள் முழுமையாகச் செலுத்திவிட்டீர்கள் என்றும், உங்கள் கிரெடிட் கார்டு அக்கவுண்டில் எந்தத் தொகையும் நிலுவையில் இல்லை மற்றும் உங்கள் மாதாந்திர ஸ்டேட்மெண்ட் ஒவ்வொரு மாதமும் 20ஆம் தேதி உருவாக்கப்படும் என்றும் வைத்துக்கொள்வோம்.

ஜூன் 12ஆம் தேதி ரூ.25000க்கு வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கியுள்ளீர்கள், ஜூன் 15ஆம் தேதி ATM இலிருந்து ரூ.5,000 ரொக்கப்பணம் எடுத்தீர்கள் (கேஷ் வித்ட்ராவல்).

ஜூன் 20ஆம் தேதி உருவாக்கப்பட்ட உங்கள் மாதாந்திர ஸ்டேட்மெண்ட்டில்
பின்வரும் உள்ளீடுகள் இருக்கும்:

| தேதி | பரிவர்த்தனை வகை | தொகை | விளக்கம் |
|---|---|---|---|
| ஜூன் 12 | பர்சேஸ் | ரூ. 25,000 Dr | கிரெடிட் கார்டு மூலம் செய்யப்பட்ட பர்சேஸ் |
| ஜூன் 15 | பணமெடுத்தல் | ரூ. 5,000 Dr | கிரெடிட் கார்டு மூலம் பணமெடுத்தல் |
| **முடிவு இருப்பு** | | **ரூ. 30,000.00 Dr** | **செலுத்த வேண்டிய மொத்த தொகை** |

தனிப்பட்ட பர்சேஸ் மற்றும் ரிவால்வ் போக்கு மற்றும் பொருந்தக்கூடிய வட்டி விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் உண்மையான வட்டி கணக்கீடு மாறுபடும். ஜூன் 20ஆம் தேதி ஸ்டேட்மெண்ட்டுக்கு நீங்கள் ஜூலை 10ஆம் தேதி பணம் செலுத்த வேண்டும். நீங்கள் ஜூலை 10ஆம் தேதி ரூ.5000 செலுத்தி, ஜூலை 11ஆம் தேதி ரூ.10,000 க்கு பர்சேஸ் செய்தால், ஜூலை 20ஆம் தேதி உருவாக்கப்படும் உங்கள் மாதாந்திர ஸ்டேட்மெண்ட்டில் உள்ளீடுகள் பின்வருமாறு இருக்கும்:

| தேதி | பரிவர்த்தனை வகை | தொகை | விளக்கம் |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | ரூ. 30,000.00 Dr | முந்தைய ஸ்டேட்மெண்ட்டிலிருந்து முன் கொண்டு வரப்பட்ட இருப்பு |
| ஜூலை 10 ஆம் தேதி | பேமெண்ட் | ரூ. 5,000 Cr | முந்தைய ஸ்டேட்மெண்ட் நிலுவைத் தொகைக்கான கட்டணம் |
| ஜூலை 20 ஆம் தேதி | வட்டி | ரூ. 1,168.69 Dr | ரூ. 1168.69 குறித்த விவரக் கூறுகள் கீழே |

| | | | |
|---|---|---|---|
| | | | கொடுக்கப்பட்டுள்ளது : |
| ஜூலை 11 ஆம் தேதி | பர்சேஸ் | ரூ. 10,000 Dr | கிரெடிட் கார்டு மூலம் செய்யப்பட்ட பர்சேஸ் |

ஜூன் 12 ஆம் தேதி முதல் ஜூலை 20 ஆம் தேதி வரை (39 நாட்கள்) ரூ. 25,000 க்கு மாதத்திற்கு @ 1.50% வட்டி [ரூ. 25,000 x 1.50% x 39 நாட்கள் x 12 மாதங்கள் / 365 நாட்கள் = ரூ. 480.29].

ஜூன் 15 ஆம் தேதி முதல் ஜூலை 10 ஆம் தேதி வரை (26 நாட்கள்) ரூ. 5,000 க்கு மாதத்திற்கு @ 1.50% வட்டி [5000 x 2.95% x 26 நாட்கள் x 12 மாதங்கள் / 365 நாட்கள் = ரூ. 64.10].
ஜூலை 11 ஆம் தேதி முதல் ஜூலை 20 ஆம் தேதி வரை (10 நாட்கள்) ரூ. 10,000 க்கு மாதத்திற்கு @ 1.50% வட்டி [ரூ. 10,000 x 2.95% x 10 நாட்கள் x 12 மாதங்கள் / 365 நாட்கள் = 49.32].

| | | | |
|---|---|---|---|
| ஜூலை 20ஆம் தேதி | GST | ரூ. 206.85 Dr | ரூ. 1,149.17*18% = ரூ. 206.85 |
| முடிவு இருப்பு | | ரூ. 36,685.36 Dr | செலுத்த வேண்டிய மொத்த தொகை |

## B) காலம் கடந்து செலுத்துவதற்கான கட்டணக் கணக்கீடு

பணம் செலுத்தப்படாமல் இருந்தாலோ அல்லது செலுத்த வேண்டிய தேதிக்குள் குறைந்தபட்சத் தொகையை விடக் குறைவாக பணம் செலுத்தப்பட்டிருந்தாலோ கார்டு வைத்திருப்பவரிடம் காலம் கடந்து செலுத்துவதற்கான கட்டணம் வசூலிக்கப்படும். காலம் கடந்து செலுத்துவதற்கான கட்டணத்தைத் தவிர்க்க, பணம் செலுத்த வேண்டிய தேதி அன்று அல்லது அதற்கு முன் ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்டு கணக்கில் க்ளியர் ஃபண்ட்ஸ் வரவு வைக்கப்பட வேண்டும்.

## C) கிரெடிட் மற்றும் ரொக்கப்பணமெடுத்தல் (கேஷ் வித்ட்ராவல்) /முன் பண (ஆட்வான்ஸ்) கட்டணம்

- **கிரெடிட் வரம்பு:** இது கார்டு வைத்திருப்பவருக்கு ஒதுக்கப்பட்ட வரம்பு ஆகும். அனைத்து பரிவர்த்தனைகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் உட்பட மொத்த நிலுவைத் தொகை இந்த வரம்பை மீறக்கூடாது.

- **ரொக்கப்பண** (கேஷ்) **வரம்பு:** இது கார்டு வைத்திருப்பவருக்கு ஒதுக்கப்பட்ட ரொக்க முன்பண வரம்பு ஆகும். இந்த வரம்பு கிரெடிட் வரம்பை விட குறைவானதாகும், மேலும் இது ஒட்டுமொத்த கிரெடிட் வரம்பின் சப்செட் ஆகும்.

  ATMகளில் இருந்து எடுக்கப்படும் பணத்திற்கு பரிவர்த்தனை கட்டணம் விதிக்கப்படுகிறது. மே.லும், சில்லறை பர்சேஸ்களில், வட்டித் திரட்டல் பணம் செலுத்த வேண்டிய தேதியில் 100% இருப்புத் தொகையைச் செலுத்துவதைப் பொறுத்தது, அது போலல்லாமல் பணப் பரிவர்த்தனைகளுக்கு எப்போதும் பரிவர்த்தனை தேதியிலிருந்து வட்டியைப் பெறலாம்.

- **கிடைக்கக்கூடிய கிரெடிட் வரம்பு:** எந்த நேரத்திலும் கிடைக்கக்கூடிய கிரெடிட் வரம்பு என்பது ஒதுக்கப்பட்ட கிரெடிட் வரம்புக்கும் அந்த நேரத்தில் கார்டில் உள்ள நிலுவைத் தொகைக்கும் உள்ள வித்தியாசமாகும். முதன்மை கார்டு வைத்திருப்பவருக்கு ஒதுக்கப்பட்ட இந்த கிரெடிட் வரம்பை ஆட்-ஆன் கார்டு வைத்திருப்பவர்(கள்) பகிர்ந்து கொள்வார்கள்.

- **கிடைக்கக்கூடிய ரொக்கப்பண வரம்பு** (கேஷ் லிமிட்): எந்த நேரத்திலும் கிடைக்கக்கூடிய ரொக்கப்பண வரம்பு, ஒதுக்கப்பட்ட ரொக்கப்பண வரம்புக்கும் அந்த நேரத்தில் கார்டில் நிலுவையில் உள்ள ரொக்கப்பண இருப்புக்கும் உள்ள வித்தியாசமாகும்.
- **சர்வதேச வரம்பு:** சர்வதேச வரம்பு என்பது வாடிக்கையாளருக்கு சர்வதேச பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட வரம்பு. கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பிக்கும் போது சர்வதேச பயன்பாட்டைத் தேர்ந்தெடுத்த வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே இது பொருந்தும். இது உங்கள் வெல்கம் கிட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேச வரம்பின்படி உள்ளது

- கிரெடிட், ரொக்கப்பணம் (கேஷ்) மற்றும் சர்வதேச (ஏதேனும் இருந்தால்) வரம்பு கார்டு வைத்திருப்பவர் ஒவ்வொருவருக்கும் மாறுபடும். கார்டை டெலிவரி செய்யும் போது வரவேற்பு கடிதத்தின் மூலம் கார்டு வைத்திருப்பவருக்கு தெரிவிக்கப்படும், மேலும் கார்டு வைத்திருப்பவருக்கு அனுப்பப்படும் மாதாந்திர ஸ்டேட்மெண்ட்டிலும் கூறப்படும். ஒவ்வொரு மாதாந்திர ஸ்டேட்மெண்ட்டை உருவாக்கும் போது கிடைக்கும் கிரெடிட் வரம்பு கூறப்பட்ட ஸ்டேட்மெண்ட்டின் ஒரு பகுதியாக வழங்கப்படுகிறது.

- **பல கார்டுகள்-வரம்பு பகிர்தல்:** ஆக்சிஸ் பேங்க் அதன் சொந்த விருப்பத்தின் பேரில் கார்டு வைத்திருப்பவர் ஏற்கனவே வைத்திருக்கும் கார்டு வகையிலிருந்து வேறுபட்ட கார்டு வகையை வழங்குவதற்கான உரிமையை கொண்டுள்ளது. எந்தவொரு கிரெடிட் கார்டிலும் எந்த நேரத்திலும் கிரெடிட் வரம்புகள் மற்றும் ரொக்கப்பண வரம்புகள் ஆக்ஸிஸ் பேங்கின் தனிப்பட்ட விருப்பத்திற்கு உட்பட்டவை. உங்களின் அனைத்து ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்டுகளிலும் கிரெடிட் வரம்பு பகிரப்பட்டுள்ளது. உங்கள் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டில் தனித்தனியாக உள்ள வெவ்வேறு கிரெடிட் வரம்புகளைப் பொருட்படுத்தாமல், ஒருங்கிணைந்த பயன்பாடு பகிரப்பட்ட வரம்பிற்கு மட்டுப்படுத்தப்படும். தனிப்பட்ட கார்டு லெவலில் அல்லது வாடிக்கையாளர் லெவலில் பகிரப்பட்ட கிரெடிட் வரம்புகள் வங்கி அடிப்படையிலான தற்போதுள்ள உள் வழிகாட்டுதல்களின் விருப்பத்தின் பேரில் தீர்மானிக்கப்படுகின்றன. கிரெடிட் கார்டுக்கு ஒதுக்கப்பட்ட கிரெடிட் வரம்பை மீறும் சூழ்நிலைகளில் நியம வரம்புக் கட்டணங்கள் பொருந்தும்.

- **பயன்பாட்டிற்கான RBI வழிகாட்டுதல்கள்**
  RBI வழிகாட்டுதல்களின்படி, அனைத்து கார்டுகளும் இந்தியாவில் உள்ள தொடர்பு அடிப்படையிலான பயன்பாட்டு இடங்களில் மட்டுமே பயன்படுத்தப்படும் (ATMகள் மற்றும் POS அதாவது பாயிண்ட் ஆஃப் சேல் சாதனங்கள்). ஆக்சிஸ் மொபைல் ஆப், இன்டர்நெட் பேங்கிங் வழியாக காண்டாக்ட்லெஸ், இன்டர்நேஷனல், ஆன்லைன் பரிவர்த்தனைகளை இயக்குவதன் மூலம் அல்லது முடக்குவது மூலம் அல்லது கஸ்டமர் கேரை தொடர்புகொள்வதன் மூலம் / அருகிலுள்ள கிளைக்கு வருகை தருவதன் மூலம் எப்போது வேண்டுமானாலும் உங்கள் பயன்பாட்டு விருப்பத்தேர்வை அமைக்கலாம் அல்லது மாற்றலாம் மற்றும் உங்கள் கார்டில் பரிவர்த்தனை வரம்புகளை நிர்வகிக்கலாம். உங்கள் கார்டின் முன் முகத்தில் உள்ள காண்டாக்ட்லெஸ் சின்னம், கார்டு காண்டாக்ட்லெஸ் ஏற்புக்குத் தயாராக இருப்பதைக் குறிக்கிறது. உங்கள் கார்டு பிளாஸ்டிக் மேலே குறிப்பிடப்பட்ட பரிவர்த்தனைகளில் எதற்கும் பொருந்தவில்லை என்றால், உங்களால் விருப்பத்தேர்வுகள்/வரம்புகளை இயக்கவோ அல்லது முடக்கவோ முடியாது, உங்கள் கோரிக்கைக்கு தயவுசெய்து கஸ்டமர் கேரை அழைக்கவும் அல்லது கிளைக்கு வருகை தரவும்.

**D) கிரெடிட் – இல்லா காலகட்டம்**

பரிவர்த்தனை தேதியைப் பொறுத்து வட்டி - இல்லா சலுகைக் கால அளவு 20 முதல் 50 நாட்கள் வரை இருக்கலாம்.

**சலுகைக் காலத்தைக் கணக்கிடுவதற்கான விளக்க உதாரணம்:** ஜூன் 20ஆம் தேதி முதல் ஜூலை 20 ஆம் தேதி வரையிலான காலகட்டத்தின் ஸ்டேட்மெண்ட்டுக்கு, பணம் செலுத்த வேண்டிய தேதி ஆகஸ்ட் 10 ஆம் தேதி ஆகும். பணம் செலுத்த வேண்டிய தேதியின்படி முந்தைய மாத ஸ்டேட்மெண்ட்டின் மொத்தத் தொகையை நீங்கள் செலுத்திவிட்டீர்கள் என்று வைத்துக் கொண்டால், சலுகை காலம்:

1. ஜூன் 24 தேதியிட்ட பர்சேஸுக்கு, ஜூன் 24 ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 10 ஆம் தேதி வரை அதாவது 47 நாட்கள் வரை வட்டி-இல்லா சலுகைக் காலம்.

2. ஜூலை 14 தேதியிட்ட பர்சேஸுக்கு, ஜூலை 18 ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 10 ஆம் தேதி வரை அதாவது 23 நாட்கள் வரை வட்டி-இல்லா சலுகைக் காலம். எனவே, பர்சேஸ் தேதியைப் பொறுத்து சலுகை காலம் மாறுபடலாம். இருப்பினும், முந்தைய மாதத்திற்கான மொத்தத் தொகையை செலுத்த வேண்டிய தேதிக்குள் செலுத்தவில்லை என்றால், இலவச கிரெடிட் காலம் கடந்துவிடும் மற்றும் வட்டி - இல்லா காலம் எதுவும் இருக்காது. ரொக்க முன்பணங்களுக்கு, பரிவர்த்தனை தேதியிலிருந்து பணம் செலுத்தும் தேதி வரை வட்டி விதிக்கப்படும்.

## E) பில்லிங் மற்றும் ஸ்டேட்மெண்ட்

i] பில்லிங் ஸ்டேட்மெண்ட் – கால இடைவெளி மற்றும் அனுப்பும் முறை: வங்கியின் பதிவுகளில் உள்ளபடி, வங்கி உங்கள் அஞ்சல் முகவரி / மின்னஞ்சல் முகவரிக்கு, ஏதேனும் பரிவர்த்தனை அல்லது கார்டு கணக்கில் 100 ரூபாய்க்கு மேல் நிலுவையில் இருந்தால், ஒரு மாதத்திற்கு ஒரு முறை ஸ்டேட்மெண்ட் / இ- ஸ்டேட்மெண்ட்டை அனுப்பும். ஸ்டேட்மெண்ட்டை பெறாதது இந்த ஒப்பந்தத்தின் கீழ் உங்கள் கடமைபொறுப்புகள் மற்றும் கடன்பொறுப்புகளைப் பாதிக்காது, மேலும் நீங்கள் பணம் செலுத்த வேண்டிய தேதிக்குள் கார்டில் உள்ள நிலுவைத் தொகையை நீங்கள் செலுத்த வேண்டியிருக்கும்.

ii] வணிக நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்துப் டெபிட்களுக்கும் மற்றும் செலுத்தப்படும் கட்டணங்களுக்கும் வங்கி கார்டு கணக்கிலிருந்து டெபிட் செய்யும், மேலும் கார்டு வைத்திருப்பவர் வங்கியில் செலுத்தும் அனைத்துப் பணம்

செலுத்துதல் மற்றும் கார்டு வைத்திருப்பவருடைய பேரில் செலுத்தும் எந்தவொரு கட்டணத்திற்கும் கார்டு கணக்கில் வரவு வைக்கும்.

iii] வங்கியானது கார்டு வைத்திருப்பவருக்கு ஒரு ரிவால்விங் கிரெடிட் வசதியை வழங்கலாம், அதில் கார்டு வைத்திருப்பவர் ஸ்டேட்மெண்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறைந்தபட்ச நிலுவைத் தொகையை (MAD) மட்டுமே செலுத்தத் தேர்வு செய்யலாம். கார்டு வைத்திருப்பவர் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையை (TAD) அல்லது MAD தொகையை செலுத்தப்பட வேண்டிய தேதியில் அல்லது அதற்கு முன் செலுத்த வேண்டும், இதுவும் ஸ்டேட்மெண்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

iv] பணம் செலுத்த வேண்டிய தேதிக்குள் MAD தொகையை செலுத்தாதது, ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்டை திரும்பப் பெறுதல் அல்லது இடைநீக்கம் (தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக) செய்தல் போன்ற அபாயத்தை உங்களுக்கு ஏற்படுத்தும். அவ்வாறு பணம் செலுத்தாததற்கும் கட்டணம் விதிக்கப்படும். ஆக்சிஸ் வங்கி கிரெடிட் கார்டை ஏற்க வேண்டாம் மற்றும்/அல்லது கார்டு அசோசியேஷன் சிஸ்டத்தில் கார்டு எண்ணை ஹாட் லிஸ்டிங்கில் பட்டியலிடுவதன் மூலம் கார்டை திரும்ப பெறவும் வங்கி தனது சொந்த விருப்பத்தின் பேரில் வணிக நிறுவனத்திற்கு அறிவுறுத்தலாம்.

v] பில்லிங் காலத்தின் போது, பணம் செலுத்த வேண்டிய தேதிக்கு முன் செலுத்த வேண்டிய குறைந்தபட்சத் தொகையை விட அதிகமாக ஒன்றுக்கு மேற்பட்ட முறை நீங்கள் செலுத்தலாம் அல்லது பணம் செலுத்த வேண்டிய தேதிக்கு முன் எந்த நேரத்திலும் கார்டு கணக்கில் இருப்பு நிலுவைத் தொகையைச் செலுத்தலாம்.

vi] உங்கள் கார்டு கணக்கிற்குச் செலுத்தப்பட்ட பணம் பின்வரும் வரிசையில் பிரிக்கப்படும்

1. வரிகள் உட்பட கட்டணங்கள் மற்றும் செலவினங்கள்
2. வட்டி கட்டணங்கள்
3. ரொக்க முன்பணம்
4. டயல்-எ-டிராஃப்ட்
5. EMI
6. இருப்பு பரிமாற்றம்
7. பர்சேஸ்

vii] உங்களால் வழங்கப்பட்ட எந்தவொரு கட்டண அறிவுறுத்தலும் பின்னர் ஏற்கப்படாவிட்டால், கார்டு சலுகைகள் இடைநிறுத்தப்படலாம் / நிறுத்தப்படலாம் மற்றும் கட்டண அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கட்டணம் வங்கியின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் கார்டு கணக்கிற்கு விதிக்கப்படும். அத்தகைய கட்டணத் தொகை வங்கியின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் மாற்றத்திற்கு உட்பட்டது. எந்தவொரு பொருத்தமான சட்ட நடவடிக்கையையும் தொடங்குவதற்கு வங்கிக்கு உரிமை உள்ளது.

viii] நகல் மாதாந்திர கணக்கு ஸ்டேட்மெண்ட்கள் உங்கள் கோரிக்கைக்கு முன்னதாக மட்டுமே வங்கியால் வழங்கப்படும், கட்டண அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வீஸ் சார்ஜிற்கு உட்பட்டு வங்கியின் விருப்பப்படி மாற்றப்படலாம்.

ix] உங்கள் தொடர்பு முகவரி / மின்னஞ்சல் முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், நீங்கள் சரியான நேரத்தில் தொடர்ந்து அறிக்கைகளைப் பெறுவதை உறுதிசெய்ய உடனடியாக வங்கியைத் தொடர்புகொண்டு அப்டேட் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

x] பில்லிங் குறித்த தகராறுகள் - ஸ்டேட்மெண்ட் வெளியிடப்பட்ட 60 நாட்களுக்குள், கார்டு வைத்திருப்பவர் (கள்) ஏதேனும் முரண்பாடுகள் இருப்பதாக வங்கிக்குத் தெரிவிக்கும் வரை, ஸ்டேட்மெண்ட்டின்(களின்) அனைத்து உள்ளடக்கங்களும் சரியானதாகவும், வைத்திருப்பவர்(கள்) ஏற்றுக்கொண்டதாகவும் கருதப்படும். மேற்கூறிய முரண்பாடுகள் முறையானவை என வங்கியால் கண்டறியப்பட்டால், வங்கியின் முழுமையான மற்றும் இறுதியான திருப்திக்கு வங்கியின் அடுத்தடுத்த விசாரணைகள் முடியும் வரை தற்காலிகமாக கட்டணத்தை மாற்றியமைக்கலாம். வங்கியால் நடத்தப்படும் மேற்கூறிய விசாரணைகள், அத்தகைய (முரண்பாடுகள்) பொறுப்பு, அந்த கார்டு வைத்திருப்பவருக்கு(களுக்கு) வசூலிக்கப்படுவதாகக் காட்டினால், அந்தக் கட்டணம் அடுத்த ஸ்டேட்மெண்ட்டில் மீண்டும் பழையநிலைக்குக் கொண்டு வரப்படும் மற்றும் கட்டண அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்ட கட்டணங்களுக்கு இணங்க கட்டணங்கள் / செலவுகள் வங்கியால் கோரப்படும்.

xi] EMI வசதியைப் பெறும்போது, அசல் பரிவர்த்தனையில் ஏதேனும் ரிவார்டு பாயிண்டுகள் சேர்ந்திருந்தால் அது ரிவர்ஸ் செய்யப்படும்.

## F) டர்ன் அரவுண்ட் டைம் (TAT) மூலம் பணம் செலுத்தும் முறை

கார்டு கணக்கிற்கான பணம் செலுத்துதல் பின்வரும் வழிகளில் ஏதேனும் ஒன்றில் செய்யப்படலாம்:

1. **ரொக்கம்**: கார்டு வைத்திருப்பவர், ஆக்சிஸ் வங்கியின் எந்தவொரு கிளையிலும் கார்டு பணம் செலுத்துதலுக்காக ரொக்கப்பணத்தை

டெபாசிட் செய்யலாம். கிளைகளில் இத்தகைய பேமெண்ட்களுக்கு ஒரு பேமெண்ட் பரிவர்த்தனைக்கு ரூ. 100 கட்டணம் வசூலிக்கப்படும். ரொக்கப்பணம் செலுத்துவதற்கான TAT - அதே நாள்

2. **காசோலை / டிராஃப்ட்:** "ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்டு பெயரிலான காசோலை அல்லது டிராஃப்ட் எடுக்கவும்
எண். XXXXXXXXXXXXXXXX" மற்றும் அதை MINC / SKYFIN பெட்டிகளின் கலெக்‌ஷன் பெட்டியில் / ஆக்சிஸ் பேங்க் கிளைகளில் உள்ள கவுண்டரில் வைக்கவும். வெளியூர் காசோலைகள் / டிராஃப்ட்கள் அதாவது குறிப்பிட்ட நகரங்களைத் தவிர மற்ற நகரங்களில் செலுத்த வேண்டிய காசோலைகள் / டிராஃப்ட்கள் (குறிப்பிட்ட நகரங்களின் பட்டியல் வங்கியால் அவ்வப்போது முடிவு செய்யப்பட்டு, கோரிக்கையின் பேரில் கிடைக்கும்) அதற்கு செயலாக்கக் கட்டணம் விதிக்கப்படும்.
ஆக்ஸிஸ் பேங்க் காசோலையின் க்ளியரன்ஸ்கான TAT – 1 பணி நாள். மற்றொரு வங்கி காசோலை க்ளியரன்ஸ்கான TAT – ரொக்கப்பணமாக மாற்றுவதன் அடிப்படையில் 3 - 5 பணி நாட்கள் (வெளியூர் காசோலை க்ளியரன்ஸ்க்கு கூடுதல் நாள் தேவை. கிளையில் உறுதி செய்யவும்).

3. **இணைக்கப்பட்ட ஆக்சிஸ் பேங்க் சேமிப்புக் கணக்கு மூலம் இணைய வழி பணம் செலுத்துதல்**: கார்டு வைத்திருப்பவர் ஆக்சிஸ் பேங்க் இணையதளம் மூலம் ஆன்லைனில் பணம் செலுத்தலாம். www.axisbank.com இல் உள்நுழையவும். க்ளியரன்ஸ்கான TAT – 1 பணி நாள்.

4. **ஆட்டோ-டெபிட்**: ஒவ்வொரு மாதமும் பணம் செலுத்த வேண்டிய தேதியில் அத்தகைய கணக்குகளில் இருந்து பணம் செலுத்துவதற்கு கார்டு வைத்திருப்பவர் எழுத்துப்பூர்வமாக தெரிவித்து சேமிப்புக் கணக்கு மூலம் நேரடியாகச் செலுத்தலாம். பணம் செலுத்த வேண்டிய தேதி ஞாயிற்றுக்கிழமையில் வந்தால், அடுத்த பணி நாளில் அந்தக் கணக்கிலிருந்து தொகை டெபிட் செய்யப்படும். க்ளியரன்ஸ்கான TAT – 1 பணி நாள்.

5. **கிளிக் டு பே / NEFT / VMT**: உங்கள் ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்டுக்கு பணம் செலுத்தவும்
க்ளிக் டு பே / NEFT / VMT பயன்படுத்தி உங்கள் பிற வங்கி சேமிப்புக் கணக்குகளில் இருந்து செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகள்
க்ளிக் டு பே க்ளியரன்ஸ்கான TAT – 3 பணி நாட்கள்.
NEFT க்ளியரன்ஸ்கான TAT – 1 பணி நாள்.

VMT க்ளியரன்ஸ்கான TAT – 2 பணி நாட்கள்.

6. **ATMகள் மூலம் பணம் செலுத்துதல்** உங்கள் ஆக்சிஸ் வங்கி கிரெடிட் கார்டுக்கான நிலுவைத் தொகையை உங்கள் ஆக்சிஸ் வங்கி டெபிட் கார்டு உடன் எந்த ஆக்சிஸ் வங்கி ATMமூலமாகவும் செலுத்தவும். க்ளியரன்ஸ்கான TAT – 1 பணி நாள்.

**7. IMPS கிரெடிட் கார்டு பேமெண்ட்:** IMPS மூலம், கார்டு வைத்திருப்பவர்கள் வேறு எந்தவொரு வங்கி மொபைல் பயன்பாட்டிலிருந்தும் எந்த ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்டுக்கும் நிகழ்நேரத்தில் பணம் செலுத்தலாம். பணம் செலுத்துவதற்காக உங்கள் மொபைல் பயன்பாட்டில் பல ஆக்சிஸ் கிரெடிட் கார்டு கணக்குகளை பதிவு செய்யலாம். இந்த வசதியின் மூலம் எவரும் (உடன் பணிபுரிபவர்கள் / நண்பர்கள் / கணவன்/மனைவி) யாருடைய கிரெடிட் கார்டுக்கும் பணம் செலுத்தலாம்.
க்ளியரன்ஸ்கான TAT - அதே நாளில்.

## G) கார்டு மெம்பர்ஷிப்பை முடித்தல் / சரண்டர் செய்தல் / ரத்து செய்தல்

கார்டு வைத்திருப்பவர், எந்த நேரத்திலும், எந்த முன் அறிவிப்பும் அளித்தோ அல்லது அளிக்காமலோ கார்டு கணக்கை நிறுத்த / சரண்டர் செய்ய தேர்வு செய்யலாம். தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க, கிரெடிட் கார்டை நான்கு துண்டுகளாக வெட்டி, ஹாலோகிராம் மற்றும் காந்தப் பட்டை நிரந்தரமாக அழிக்கப்படுவதை உறுதிசெய்ய அறிவுறுத்தப்படுகிறது. முழு கார்டு எண்ணைக் குறிப்பிட்டு வாடிக்கையாளர் சேவை மின்னஞ்சல் ஐடிக்கு எழுதுவதன் மூலம் அல்லது கஸ்டமர் கேரை அழைப்பதன் மூலம் கார்டு வைத்திருப்பவர் எந்த நேரத்திலும் கார்டு மெம்பர்ஷிப்பை நிறுத்தலாம். ஆக்சிஸ் வங்கியானது, கூறப்பட்ட கார்டு கணக்கைப் பொறுத்தவரையில் செலுத்த வேண்டிய மற்றும் நிலுவையில் உள்ள அனைத்துத் தொகைகளையும் பெற்றவுடன் மட்டுமே இந்த நிறுத்தம் நடைமுறைக்கு வரும். கிரெடிட் கார்டு திட்டம் முடிக்கப்பட்டால் அல்லது கிரெடிட் கார்டை புதுப்பிக்கும் போது, ஆக்சிஸ் வங்கி அதன் சொந்த விருப்பத்தின் பேரில் கார்டு வைத்திருப்பவர் ஏற்கனவே வைத்திருக்கும் கார்டு வகையிலிருந்து வேறுபட்ட கார்டு வகையை வழங்குவதற்கான உரிமையை கொண்டுள்ளது. எந்தவொரு கிரெடிட் கார்டிலும் எந்த நேரத்திலும் கிரெடிட் வரம்புகள் மற்றும் ரொக்கப்பண வரம்புகள் ஆக்சிஸ் வங்கியின் தனிப்பட்ட விருப்பத்தின்படி இருக்கும்.

கார்டு விண்ணப்பமானது முடிக்கப்படுதல் / புதுப்பித்தலின் போது வழங்கப்படும் எந்தவொரு மாற்று கார்டுக்கும் செல்லுபடியாகும்.

## H) கார்டை தொலைத்துவிடுதல் / திருட்டு / தவறான பயன்பாடு

கார்டு தொலைந்துவிட்டாலோ, திருட்டு போய்விட்டாலோ, உங்களின் PIN அல்லது பிற செக்யூரிட்டி தகவல்கள் வேறு யாருக்காவது தெரிந்தாலோ அல்லது உங்கள் அனுமதியின்றிப் பயன்படுத்தப்பட்டாலோ, வங்கிக்கு உடனடியாகத் தொலைபேசியில் தெரிவிக்க வேண்டும்.
ஒரு போலீஸ் புகார் / முதல் தகவல் ரிப்போர்ட் (FIR) உடனடியாக அருகிலுள்ள காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட வேண்டும், வங்கியில் அதன் நகல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தவறாகப் பயன்படுத்தப்பட்டால், பாலிசி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு உட்பட்டு, லாஸ்ட் கார்டு பொறுப்பின் கீழ் உள்ளடக்கப்பட்ட தொகைக்கு வங்கியின் பொறுப்பு வரையறுக்கப்படும். ATM அல்லது PIN/பாஸ்வேர்ட்/OTP/mPIN/CVV அடிப்படையிலான பரிவர்த்தனைகளுக்கு கார்டுகளை தவறாகப் பயன்படுத்துவதற்கு கார்டு வைத்திருப்பவர் மட்டுமே பொறுப்பாவார்.

## I) PINv-ஐ பாதுகாப்பாக வைத்திருப்பது தொடர்பான அறிவுரை

கார்டுடன் பயன்படுத்த கார்டு வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட அடையாள எண் (PIN) அல்லது கார்டு வைத்திருப்பவரால் PIN ஆக தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த எண்ணும் கார்டு வைத்திருப்பவருக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டும். இது கார்டு வைத்திருப்பவரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்கானது மற்றும் மாற்ற முடியாதது மற்றும் கண்டிப்பாக ரகசியமானது. PIN எண்ணை மூன்றாம் தரப்பினர் பயன்படுத்துவதற்கு வசதியாக எந்த வடிவத்திலும், எந்த இடத்திலும் அல்லது முறையிலும் எழுதி வைத்திருக்கக்கூடாது. எந்தவொரு சூழ்நிலையிலும் அல்லது எந்த வகையிலும், தன்னார்வமாகவோ அல்லது வேறுவிதமாகவோ, வங்கியின் பணியாளர்களுக்கோ அல்லது வணிக நிறுவனங்களுக்கோ, எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்கும் PIN தெரிவிக்கப்படக்கூடாது. கார்டு வைத்திருப்பவரின் பின்னை வழங்கும்போது வங்கி கவனமாகச் செயல்பட வேண்டும்.

**கார்டு வைத்திருப்பவர்களுக்கான காப்பீடு**

கார்டு மாறுபாட்டின் வகையைப் பொறுத்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதி பொருந்தும். பொருந்தக்கூடிய காப்பீட்டுத் திட்டங்களுக்கு வரவேற்பு கையேட்டைப் பார்க்கவும்.

**விமான விபத்துக் கவர்:** ஆக்சிஸ் வங்கி கிரெடிட் கார்டை ஒரு வணிக நிறுவனத்தில் அல்லது ATMஇல் பணம் எடுப்பதற்கு குறைந்தபட்சம் 90 நாட்களுக்கு முன்னர் பயன்படுத்தினால் மற்றும் ஆக்சிஸ் வங்கி கிரெடிட் கார்டை விமான டிக்கெட் வாங்கப் பயன்படுத்தினால் மட்டுமே விமான விபத்து கவர் செல்லுபடியாகும். ஆக்சிஸ் வங்கியில் செலுத்த வேண்டிய அனைத்து பாக்கிகளும் செலுத்தப்படும் வரை, கார்டு வைத்திருப்பவரின் நியமனதாரருக்கு விமான விபத்துக் காப்பீட்டுக் கொள்கையின் கீழ் எந்தத் தொகைக்கும் உரிமை இல்லை. நிலுவைத் தொகையை சரிசெய்வதற்கு காப்பீட்டுத் தொகைக்கு ஆக்சிஸ் வங்கி முதல் கட்டணம்/உரிமையைப் பெறும்.

**ஜீரோ லாஸ்ட் கார்டு கடன்பொறுப்பு:** மோசடி செய்து வாங்கும் பரிவர்த்தனைகளுக்கு எதிரான பாதுகாப்பு கிடைக்கிறது, கார்டு தொலைந்த கார்டு வைத்திருப்பவர் ஆக்சிஸ் வங்கிக்கு தெரிவித்த தருணத்திலிருந்து தெரிவிக்கும் காலகட்டத்திற்கு 30 நாட்களுக்கு முன்னதாக இருக்கும். மோசடியான பேமெண்ட் பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே இந்த கவர் செல்லுபடியாகும் மற்றும் FIR உடன் கட்டாயமாக ஆதரிக்கப்பட வேண்டும். இந்த காப்பீடு ATM மற்றும் PIN /பாஸ்வேர்ட்/OTP/mPIN/CVV அடிப்படையிலான பரிவர்த்தனைகளுக்கு செல்லுபடியாகாது.

**பர்சேஸ் பாதுகாப்பு:** கிரெடிட் கார்டில் வாங்கிய 90 நாட்களுக்குள் தீ அல்லது திருட்டுக்கு எதிரான பாதுகாப்பு, கட்டாயமாக FIR உடன் பதிவுசெய்யப்பட வேண்டும். இழப்புக்கு வழிவகுக்கும் வாடிக்கையாளரின் பெரும் அலட்சியம் ஈடுசெய்யப்படாது. நகைகள் மற்றும் பிற அழிந்துபோகக்கூடிய பொருட்கள் காப்பீடு செய்யப்படாது.

**விலைப் பாதுகாப்பு:** ஒரு பொருளுக்கு ஆக்சிஸ் பேங்க் கிரெடிட் கார்ட் மூலம் செலுத்தப்பட்ட விலைக்கும் அதே பொருளுக்கு (அதே பிராண்ட், தயாரிப்பு, மாடல் பெயர் மற்றும்/அல்லது எண்) குறைந்த விலையில் விளம்பரப்படுத்தப்பட்ட விலைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை, இந்த கவரின் கீழ் திருப்பிச் செலுத்தப்படும். அமேசான், ஃப்ளிப்கார்ட் அல்லது புகழ்பெற்ற ஆன்லைன் பர்சேஸ் தளத்திற்கு மட்டும் இந்திய ரூபாய் 2500 க்கு மேல் அசல் பர்சேஸுக்கு மட்டுமே பொருந்தும். குறைந்த விலை அதே இ-காமர்ஸ் நிறுவனத்தில் இருக்க வேண்டும்,

ப்ரிண்ட் செய்யப்பட்ட விளம்பரம் வாங்கிய 3 நாட்களுக்குள் வெளியிடப்பட வேண்டும். கோரிக்கைக்கான அறிவிப்பு விளம்பரம் ப்ரிண்ட் செய்யப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் இருக்க வேண்டும். (இந்த அம்சத்தின் கீழ் உள்ள பொருட்களுக்கு வங்கியைத் தொடர்பு கொள்ளவும்)

**கிரெடிட் ஷீல்டு:** தற்செயலான மரணம் ஏற்பட்டால், கார்டில் குறிப்பிட்ட தொகை வரை நிலுவையில் இருக்கும் கவர்.

**செக்-இன் பேகேஜில் தாமதம்:** வெளிநாட்டுப் பயணத்தின் போது 6 மணி நேரத்திற்கும் மேலாக பேகேஜ் வர தாமதம் ஆனால் அடிப்படைத் தேவைகளுக்கான பொருட்களின் விலையை திருப்பிச் செலுத்துகிறது. ஆக்சிஸ் வங்கி கிரெடிட் கார்டு மூலம் விமான டிக்கெட் வாங்கினால் மட்டுமே செல்லுபடியாகும். செக்-இன் செய்யப்பட்ட பேகேஜ் என்பது, காப்பீடு செய்யப்பட்ட நபரால் ஒப்படைக்கப்பட்டு, இந்தியாவிற்கு வெளியே உள்ள சர்வதேச ஏர்லைன்ஸ் / கேரியரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேகேஜ், காப்பீடு செய்யப்பட்ட நபர் பயணிக்கும் அதே போக்குவரத்து முறையில் போக்குவரத்துக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான ரசீதை கேரியர் வழங்கியது என்பதாகும்.

**செக்-இன் பேகேஜ் தொலைந்துபோதல்:** வெளிநாட்டுப் பயணத்தின் போது பேகேஜ் தொலைந்துபோதல் அல்லது பேகேஜிற்கு ஏற்படும் சேதம் ஆகியவற்றை கவர் செய்யும். ஆக்சிஸ் வங்கி கிரெடிட் கார்டு மூலம் விமான டிக்கெட் வாங்கினால் மட்டுமே செல்லுபடியாகும். செக்-இன் செய்யப்பட்ட பேகேஜ் என்பது, காப்பீடு செய்யப்பட்ட நபரால் ஒப்படைக்கப்பட்டு, இந்தியாவிற்கு வெளியே உள்ள சர்வதேச ஏர்லைன்ஸ் / கேரியரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேகேஜ், காப்பீடு செய்யப்பட்ட நபர் பயணிக்கும் அதே போக்குவரத்து முறையில் போக்குவரத்துக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான ரசீதை கேரியர் வழங்கியது என்பதாகும்.

**பயண ஆவணங்கள் தொலைந்துபோதல்:** வெளிநாட்டுப் பயணத்தின் போது தொலைந்த பாஸ்போர்ட் / பிற பயண ஆவணங்களுக்கான விண்ணப்பக் கட்டணம் உட்பட பாஸ்போர்ட் பெறுவதற்கு ஏற்படும் செலவுகள் கவர் செய்யப்படும். ஆக்சிஸ் வங்கி கிரெடிட் கார்டு மூலம் விமான டிக்கெட் வாங்கினால் மட்டுமே செல்லுபடியாகும்.

## K) தவறுதல் நிலை

1) தவறுதல் ஏற்படும் பட்சத்தில், அதாவது செலுத்த வேண்டிய தேதியில் குறைந்தபட்ச தொகை செலுத்தப்படாவிட்டால் அல்லது கார்டு உறுப்பினர் ஒப்பந்தத்தின் ஏதேனும் உட்பிரிவை மீறினால், கார்டு வைத்திருப்பவருக்கு தபால், தொலைநகல் (ஃபேக்ஸ்), தொலைபேசி, மின்னஞ்சல், SMS அனுப்புதல் மற்றும் / அல்லது நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக நியமிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினர் மூலம் அவ்வப்போது நினைவூட்டல்கள் அனுப்பப்படும். அவ்வாறு நியமிக்கப்பட்ட எந்த மூன்றாம் தரப்பினரும், இந்தியன் வங்கியின் சங்கத்தின் (IBA) கடன் வசூல் விதித்தொகுப்பை கடைபிடிக்க வேண்டும்.

2) கார்டு வைத்திருப்பவர் கடனைத் திருப்பிச் செலுத்த தவறும் பட்சத்தில், வங்கி அதன் சொந்த விருப்பத்தின் பேரில் பின்வரும் உரிமைகள் கொண்டுள்ளது:
   a. அனைத்து கிரெடிட் கார்டு வசதிகளையும் கார்டு வைத்திருப்பவரிடமிருந்து திரும்பப் பெற.
   b. கார்டு வைத்திருப்பவரிடம் தனது கார்டில் உள்ள நிலுவைத் தொகை அனைத்தையும் உடனடியாக செலுத்துமாறு கேட்க.
   c. வங்கியில் கார்டு வைத்திருப்பவரின் பெயரில் பராமரிக்கப்படும் பணம் / வைப்புத்தொகைகள் / கணக்குகளுக்கு எதிராக நிலுவையில் உள்ள தொகையை பற்றுரிமை மற்றும் செட்-ஆஃப் (lien and set - off) செய்ய வங்கியின் உரிமையைப் பயன்படுத்த.
3) தவறுதல் நிலை ஏற்படும் பட்சத்தில், கடன் தகவல் பணியகங்களுக்கு அல்லது சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிற ஏஜென்சிகளுக்கு தவறுதல் நிலை ரிப்போர்டை வங்கி அனுப்பலாம். கட்டணம் செலுத்த வேண்டிய தேதிக்கும் பில்லிங் ஸ்டேட்மெண்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பில்லிங் தேதிக்கும் இடைப்பட்ட கால அளவு, கார்டு வைத்திருப்பவரைத் தவறுதல் நிலைக்குரியவர் எனப் புகாரளிப்பதற்கான நோட்டீஸ் காலமாகக் கருதப்படுகிறது.

4) தவறுதல் நிலை ரிப்போர்டை வித்ட்ரா செய்வதற்கான நடைமுறை மற்றும் நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்குப் பிறகு தவறுதல் நிலை ரிப்போர்டை வித்ட்ரா செய்யப்படும் காலகட்டம்:

   * CIBIL பரிந்துரைத்த வடிவத்தில் ஒவ்வொரு மாதமும் CIBIL - கிரெடிட் இன்ஃபர்மேஷன் ப்யூரோ (இந்தியா) லிமிடெட் க்கு கார்டு வைத்திருப்பவரின் தரவை வங்கி சமர்ப்பிக்கிறது. இந்தத் தரவு தவறுதல் நிலைக்குரிய மற்றும் தற்போதைய அனைத்து கார்டு வைத்திருப்பவர்களின் முந்தைய மாதத்திற்கான பணம் திருப்பிச் செலுத்தும் நிலையை உள்ளடக்கியது. CIBIL சமர்ப்பிக்கப்பட்ட தரவை அடுத்த முப்பது நாட்களில் தங்கள் சர்வரில் பதிவேற்றுகிறது.

5) கார்டு வைத்திருப்பவரின் இறப்பு / பணத்தை திருப்பி செலுத்த முடியாத நிரந்த திறன் இன்மை ஏற்பட்டால் நிலுவைத் தொகையை திரும்பப் பெறுதல்: முழு நிலுவைத் தொகை (பில்லிங் செய்யப்படாத பரிவர்த்தனைகள் உட்பட) உடனடியாக நிலுவை ஆகி, ஆக்சிஸ் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டும். கார்டு வைத்திருப்பவரின் உடைமைகளிலிருந்து மொத்த நிலுவைத் தொகையை மீட்டெடுக்க ஆக்சிஸ் வங்கிக்கு உரிமை உண்டு. வங்கியில் கார்டு வைத்திருப்பவரின் பெயரில் பராமரிக்கப்படும் பணம் / வைப்புத்தொகை / கணக்குகள் ஆகியவற்றிலிருந்து மொத்த நிலுவைத் தொகையை மீட்டெடுக்கவும் வங்கிக்கு உரிமை உண்டு.

## L) வெளிப்படுத்துதல்

ஆக்சிஸ் வங்கி, ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட கிரெடிட் ப்யூரோக்களுடன் இணைந்திருக்கலாம் மற்றும் உங்கள் நடப்பு இருப்பு, பேமெண்ட் வரலாறு, புள்ளியியல் விவரங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய, ஆனால் அவை மட்டும் அல்லாமல், கடன் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும். கிரெடிட் ப்யூரோக்கள் கடன் வழங்கப்பட வேண்டுமா அல்லது வழங்கக் கூடாதா என்பது பற்றி எந்த அபிப்பிராயத்தையும், குறிப்பையும் அல்லது கருத்தையும் வழங்காது. தேவையான நிலுவைத் தொகையை உரிய நேரத்தில் செலுத்துவதன் மூலம் ஒரு நல்ல கிரெடிட் வரலாற்றைப் பராமரிப்பது உங்களுக்கு நல்லது. கிரெடிட் ப்யூரோக்கள் செயல்படுவதால், பொறுப்பான வாடிக்கையாளர்கள், கடன் வழங்குபவர்களிடமிருந்து சிறந்த விதிமுறைகளில் வேகமான மற்றும் அதிக போட்டித்தன்மையுள்ள பணிகளை எதிர்பார்க்கலாம். வாடிக்கையாளர்களின் தவறுதல்நிலை கிரெடிட் ப்யூரோக்களுக்கு கிடைக்கும், இதனால் எதிர்கால தேவைகளுக்கு உங்கள் கடன் தகுதியை பாதிக்கப்படும்.

ஆக்சிஸ் வங்கி வாடிக்கையாளர் தகவல்களை மாதாந்திர அடிப்படையில் அல்லது வங்கிக்கும் கிரெடிட் ப்யூரோக்களுக்கும் இடையே ஒப்புக்கொள்ளப்படும் மற்ற காலக்கட்டத்தில் வாடிக்கையாளர் தகவலை வழங்கும். ஆக்சிஸ் வங்கிக்கு ஏதேனும் பில்லிங் தகராறு குறித்து தெரிவிக்கப்பட்டால், சர்ச்சை தீர்க்கப்படும் வரை வங்கி கிரெடிட் ப்யூரோக்களுக்கு தகவல் தெரிவிப்பதை நிறுத்தி வைக்கும். ஆக்சிஸ் வங்கி பொருத்தமானதாகவும் அவசியமாகவும் கருதும் வகையில், கார்டு வைத்திருப்பவர் தனது கடமையை நிறைவேற்றுவதில் செய்த ஏதேனும் தவறுதல்நிலை தொடர்பான தகவல்கள் உட்பட, கார்டு வைத்திருப்பவர் / ஆட்-ஆன் (Add – on)

கார்டு வைத்திருப்பவர் (கள்) தொடர்பான தகவல்களை வங்கியால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் ஏதேனும் தற்போது உள்ள அல்லது அதற்கு மேற்பட்ட கிரெடிட் ப்யூரோக்களுடன் பகிர்ந்து கொள்ள ஆக்சிஸ் வங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை கார்டு வைத்திருப்பவர் ஒப்புக்கொள்கிறார். அதன்படி, அத்தகைய கிரெடிட் ப்யூரோக்களுக்கு தகவலை வெளியிடுவதற்கு ஆட்-ஆன் கார்டு வைத்திருப்பவர் ஒப்புதல் அளிக்க வேண்டும். அத்தகைய நிறுவனங்கள் வங்கிகள் / நிதி நிறுவனங்கள் மற்றும் பிற கடன் வழங்குபவர்களுக்கு செயலாக்கப்பட்ட தகவல் அல்லது தரவு அல்லது திட்டங்களை மேலும் கிடைக்கச் செய்யலாம். கிரெடிட் ப்யூரோக்களில் கிரெடிட் ப்யூரோக்கள், கிரெடிட் ரெஃபரன்ஸ் ஏஜென்சிகள், கிரெடிட் தகவல் நிறுவனங்கள் அல்லது கடன் வாங்குபவர்கள் தொடர்பான கிரெடிட் தகவல்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பகிர்தல் ஆகியவற்றின் நோக்கத்திற்காக RBI ஆல் உருவாக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்த நிறுவனமும் உள்ளடங்கும்.

கார்டு வைத்திருப்பவர் ஆக்சிஸ் வங்கி / அதன் அஸொசியேட்கள் / துணை நிறுவனங்கள் / முகவர்களிடமிருந்து நேரடி மார்கெட்டிங் அல்லது டெலிகால்லிங் / டெலிசேல்ஸ் அழைப்புகளைப் பெற விரும்பவில்லை என்றால், 'TRAI' இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள விவரங்களின்படி ‘வழங்குநர் வாடிக்கையாளர் விருப்பப் பதிவேட்டில்' பதிவு செய்வதன் மூலம் கார்டு வைத்திருப்பவர் விலகலாம்.

ஆக்சிஸ் வங்கி இந்திய வங்கி விதித்தொகுப்புகள் மற்றும் தரநிலைகள் வாரியத்தின் (BCSBI) உறுப்பினராக உள்ளது. BCSBI விதித்தொகுப்புகளின் கீழ் எங்களின் உறுதிப்பாடுகளைக் காண, எங்கள் வலைத்தளத்தின் முகப்புப் பக்கத்தைப் பார்க்கவும்.

## M) மத்தியஸ்த உட்பிரிவு

இங்குள்ளவர்களிலிருந்து எழும் அனைத்து சர்ச்சைகள், வேறுபாடுகள் மற்றும் / அல்லது உரிமைகோரல்கள் அல்லது கேள்விகள், அல்லது எந்த வகையிலும் அதை ஒட்டிய அல்லது அதைப் பற்றிய அல்லது அது குறித்த அமைப்புகள், பொருள் அல்லது விளைவு அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தரப்பினர்களின் உரிமை, கடமைபொறுப்புகள் மற்றும் கடன்பொறுப்புகள் ஆகியவை மத்தியஸ்தம் மற்றும் சமரசச் சட்டம், 1996, அல்லது அதன் ஏதேனும் சட்டப்பூர்வ திருத்தங்களின்படி, கடனளிப்பவர் / வங்கியால் நியமிக்கப்படும் ஒரு தனி மத்தியஸ்தரால் செய்யப்படும், மற்றும் மத்தியஸ்தராகச் செயல்பட நியமிக்கப்பட்ட நபரின் மரணம் ஏற்பட்டால், அல்லது

அவரது விருப்பமின்மை, மறுப்பு, புறக்கணிப்பு, இயலாமை அல்லது திறனற்ற நிலை காரணமாக, கடன் வழங்குபவர்/வங்கி ஒரு புதிய மத்தியஸ்தரை ஒரே மத்தியஸ்தராக நியமிக்கலாம். மத்தியஸ்தர் தீர்ப்புக்கான காரணங்களைத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை மற்றும் மத்தியஸ்தரின் தீர்ப்பு இறுதியானது மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் கட்டுப்படுத்துவதாகும். மத்தியஸ்த நடவடிக்கைகள் மும்பையில் மட்டுமே நடைபெறும்.

## N) தடை உட்பிரிவு

லாட்டரி சீட்டுகள், தடைசெய்யப்பட்ட அல்லது சட்டப்படி விலக்கப்பட்ட பத்திரிக்கைகள், ஸ்வீப்ஸ்டேக்குகளில் பங்கேற்பது, கல பேக் சேவைகளுக்கான கட்டணம் மற்றும் / அல்லது அத்தகைய பொருட்கள் / செயல்பாடுகள் போன்ற தடைசெய்யப்பட்ட பொருட்களை வாங்குவதற்கு சர்வதேச கிரெடிட் கார்டுகளை இணையத்தில் பயன்படுத்த முடியாது. அதற்கு அந்நிய செலாவணி அனுமதிக்கப்படாது.

## O)FEMA (அந்நிய செலாவணி மேலாண்மை சட்டம்.)

i) இந்தியாவிற்கு வெளியே பரிவர்த்தனை செய்வதற்கு கார்டின் பயன்பாடு, RBI இன் செலாவணி கட்டுப்பாட்டு விதிமுறைகள் மற்றும் அந்நிய செலாவணி மேலாண்மை சட்டம், 1999 உட்பட பொருந்தக்கூடிய சட்டத்தின்படி செய்யப்பட வேண்டும், மேலும் அவ்வாறு செய்யத் தவறினால், உங்கள் மீது தண்டனைக்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ii) மின்னணு / இணைய வர்த்தக போர்டல்கள் மூலம் வெளிநாட்டு அந்நிய செலாவணி வர்த்தகத்தில் (Overseas Forex Trading) நேரடியாக / மறைமுகமாக பணம் செலுத்துவதற்கு கிரெடிட் கார்டை பயன்படுத்த முடியாது. ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின்படி இது தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு, எங்கள் வலைத்தளத்தைப் பார்க்கவும்.

iii) கார்டு இந்தியாவிலும் வெளிநாட்டிலும் பயன்படுத்த செல்லுபடியாகும். இருப்பினும், நேபாளம் மற்றும் பூட்டானில் அந்நிய செலாவணி பரிவர்த்தனைகளை செய்வதற்கு இது செல்லுபடியாகாது

iv) NRI வாடிக்கையாளர்களுக்கு மட்டும் ஆக்சிஸ் வங்கி NRE கணக்கிலிருந்து ஆட்டோ பே முறையில் 100% கட்டணம் செலுத்துவது கட்டாயமாகும்.

v) NRI வாடிக்கையாளர்களுக்கு ரொக்கப் பணம் செலுத்துதல் ஏற்றுக்கொள்ளப்படாது.

**P)கார்டு கணக்கில் அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கி பரிவர்த்தனைகள்**

1) வங்கிக்கு செல்லுபடியாகும் மொபைல் எண்களை தராத வாடிக்கையாளர்களுக்கு ATM களில் பணம் எடுப்பதைத் தவிர மின்னணு பரிவர்த்தனைகளின் வசதியை வங்கி வழங்காது.
2) வாடிக்கையாளருக்கு கிடைக்கப்பெறும் ஏதேனும் ஸ்டேட்மெண்ட் / பதிவுகளில் பரிவர்த்தனைகள் / இருப்பு விவரங்களில் ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால், வாடிக்கையாளர் ஏழு (7) நாட்களுக்குள் வங்கிக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும்.
3) ஏழு (7) பணி நாட்களுக்கு அப்பால் வங்கி ஏதேனும் தகவலைப் பெற்றால், வங்கிகளின் இணையதளத்தில் கிடைக்கும் வங்கிகள் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாலிசியின்படி வாடிக்கையாளர்களின் கடன்பொறுப்பு தீர்மானிக்கப்படும்.
4) உங்கள் அறிவுறுத்தல்களின் அனைத்துப் பதிவுகள் மற்றும் வங்கியால் பராமரிக்கப்படும் (செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட பேமெண்ட் உட்பட,ஆனால் அவை மட்டுமே அல்லாத) மற்ற விவரங்கள், மின்னணு அல்லது ஆவணப் வடிவத்தில் இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைத் தொடர்ந்து, உங்களுக்கு எதிராக, அத்தகைய அறிவுறுத்தல்களின் சான்றுகள் மற்றும் பிற விவரங்கள் முடிவானதாகக் கருதப்படும்.
5) குறிப்பிட்ட கணக்கு தொடர்பான புகாரளிக்கும் நேரம் மற்றும்/அல்லது பரிவர்த்தனை/கள் அல்லது கணக்கு தொடர்பான வேறு எந்தவொரு விஷயத்திலும் ஏதேனும் தகராறு ஏற்பட்டால், சர்ச்சைக்குரிய நேரம் மற்றும்/அல்லது நம்பகத்தன்மையைக் கண்டறிய வங்கிக்கு உரிமை உண்டு மற்றும் மூன்றாம் தரப்பினரின் மோசடி அல்லது மோசடியில் நீங்கள் பங்குபெறாத பட்சத்தில் உங்கள் கார்டு கணக்கில் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் நடந்தால் பரிவர்த்தனை மற்றும் உங்கள் கடன்பொறுப்பு ஆகியவை RBI சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள "வாடிக்கையாளர் பாதுகாப்பு - அங்கீகரிக்கப்படாத மின்னணு பரிவர்த்தனைகளில் வாடிக்கையாளர்களின் வரையறுக்கப்பட்ட கடன்பொறுப்பு" வழிகாட்டுதல்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும். ஒழுங்குமுறைகளில் அவ்வப்போது திருத்தப்படும் ஏதேனும் மாற்றங்கள் அந்த நேரத்தில் பொருந்தும் மற்றும் கட்டுப்படுத்துவதாகும்.

6) கஸ்டமர் கேர்/வாடிக்கையாளர் குறைதீர்ப்புக்கான தொடர்பு விவரங்களுக்கு, தயவுசெய்து எங்கள் இணையதளமான **www.axisbank.com/support** ஐப் பார்க்கவும்

**Q) பாதுகாக்கப்பட்ட கிரெடிட் கார்டுகள்**

1) ஃபிக்ஸட் டெபாசிட், பாதுகாக்கப்பட்ட கிரெடிட் கார்டுகள் அல்லது வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் வசதியின் கீழ் வாடிக்கையாளரிடமிருந்து வங்கிக்கு வரக்கூடிய அனைத்துப் பணங்களின் இறுதி இருப்புக்கான தொடரும் பாதுகாப்பாகச் செயல்படும்.
2) தவறுதல்நிலை ஏற்பட்டால் அல்லது கடன் வசதி அல்லது வசதிகள் தேவைக்கேற்ப திருப்பிச் செலுத்தப்படாவிட்டால், ஃபிக்ஸட்/டர்ம் டெபாசிட்டை முன்கூட்டியே பணமாக்க அல்லது எந்த நேரத்திலும் வழங்கப்படும் அல்லது வைத்திருக்கும் பத்திரங்கள்/ ஃபிக்ஸட் அல்லது டர்ம் டெபாசிட்களை செட் ஆஃப் செய்ய அல்லது மேம்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் வங்கி எடுக்கலாம் அல்லது வங்கியால் நியாயமானதாகக் கருதப்பட்டதை மறுஒதுக்கீடு செய்தல் மற்றும் அதன் ஏதேனும் ஒரு கிளைகளில் உள்ள வங்கி கணக்கு(களில்) வாடிக்கையாளரின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான நிகரத் தொகையை பொருத்தமானதாகக் கருதலாம்.

3) வாடிக்கையாளரின் தகுதிநிலையின் அடிப்படையில் பாதுகாக்கப்பட்ட கிரெடிட் கார்டுடன் இணைக்கப்பட்ட ஃபிக்ஸட் டெபாசிட்டில் இருந்து உரிமையை அகற்ற வங்கிக்கு உரிமை உண்டு.

**பொறுப்புத் துறப்பு:**

வருவாய், லாபம், வணிகம், ஒப்பந்தங்கள், எதிர்பார்க்கப்படும் சேமிப்பு அல்லது குட்வில் ஆகியவற்றின் இழப்பு உட்பட ஆனால் அவை மட்டும் அல்லாமல், நேரடியாகவோ, மறைமுகமாகவோ அல்லது விளைவானதாகவோ ஏதேனும் இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டால்,

எதிர்பார்க்கக்கூடிய அல்லது எதிர்பாரா மென்பொருள் உட்பட ஏதேனும் உபகரணங்களின் பயன்பாடு அல்லது மதிப்பு இழப்பு, இதனால் பயனரால் அல்லது எந்தவொரு நபராலும் பாதிக்கப்படுவது, எவ்வாறாயினும், ஏதேனும் தாமதம், தடங்கல், இடைநிறுத்தல், தீர்மானம் அல்லது கோரிக்கையை பெறுதல் மற்றும் செயலாக்குவதில் வங்கியின் பிழை மற்றும் பதில்களை உருவாக்குதல் மற்றும் பதிலளித்தல் அல்லது பயனரின் தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் எந்தவொரு சேவை வழங்குநரின் நெட்வொர்க் மற்றும் வங்கியின் சிஸ்டத்தில் ஏதேனும் ஒரு தகவல் அல்லது செய்தியை அனுப்புவதில் செயலிழப்பு, தாமதம், குறுக்கீடு, இடைநிறுத்தம், கட்டுப்பாடு அல்லது பிழை, வங்கியின் சிஸ்டம் அல்லது ஏதேனும் சேவை வழங்குநர் மற்றும் / அல்லது மூன்றாம் தரப்பினரின் நெட்வொர்க் வசதியை வழங்குவதற்கு தேவையான சேவைகளை வழங்குவதற்கு வங்கி, அதன் பணியாளர்கள், முகவர்கள் அல்லது ஒப்பந்ததாரர்கள் பொறுப்பேற்க மாட்டார்கள். ஆக்சிஸ் வங்கியானது அதன் சொந்த விருப்பத்தின் பேரில், வெளிப்புற சேவை வழங்குநர்/கள் அல்லது முகவர்/கள் மற்றும் அதன் திட்டங்கள் தொடர்பாக தேவைப்படும் அல்லது அவசியமான அத்தகைய விதிமுறைகளின் அடிப்படையில் சேவைகளைப் பயன்படுத்தலாம்.

· விண்ணப்ப படிவத்தின் நிலையை 21 பணி நாட்களுக்குள் ஆக்சிஸ் வங்கி தெரிவிக்கும்.

· ஆக்சிஸ் பேங்க் ஏதேனும் ஆஃபர்கள், பரிசுகள், வவுச்சர்கள், ரிவார்டு பாயின்ட்களை திரும்பப் பெறுதல், கார்டை செயல்படுத்துதல் அல்லது ரத்து செய்தல் போன்றவற்றிற்காக கார்டு CVV, PIN, OTP அல்லது இண்டர்நெட் பாஸ்வேர்டை கேட்காது. அழைப்பு/மின்னஞ்சலில் இதுபோன்ற கோரிக்கைகளை புறக்கணிக்கவும். ஆக்சிஸ் வங்கியின் தொடர்பு எண்களை அதிகாரப்பூர்வ இணையதளத்தில் கடிதப் பரிமாற்றத்திற்கு முன் உறுதிப்படுத்தவும்.

· ஏதேனும் ஆன்லைன்/இ-காம் பரிவர்த்தனைகளைத் தொடங்குவதற்கு முன், இணையதளம் மற்றும்/அல்லது போர்ட்டலின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தவும். உங்கள் பணத்தை ஏமாற்றி பெற முயலும் போலி இணையதளங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும்.

· வங்கியால் வழங்கப்பட்ட கார்டு வாடிக்கையாளரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்கானதாகும். மூன்றாம் தரப்பினரின் சார்பாக அல்லது நன்மைக்காக செய்யப்படும் பரிவர்த்தனைகளை வங்கி ஊக்குவிக்காது அல்லது ஆதரிக்காது.

· சர்வதேச பரிவர்த்தனைகளுக்கான வணிகர்களின் ரீஃபண்ட்கள்/தகராறுகள் ஏற்பட்டால், நாணய ஏற்ற இறக்கத்தால் எழும் எந்த விகித வித்தியாசத்தையும் வாடிக்கையாளர் ஏற்க வேண்டும்.

## தொடர்பு கொள்ளும் வழிகள்

**கஸ்டமர் சர்வீசஸ்**

இந்தியாவில் உள்ள எந்தவொரு லேண்ட்லைன் அல்லது செல்போனிலிருந்தும் 1860 500 5555 அல்லது 1860 419 5555 என்ற எண்ணை அணுகலாம்

ACE கிரெடிட் கார்டுகளுக்கு: 1860 419 1919
பர்கண்டி பிரைவேட் கார்டுகளுக்கு: 1800 210 8888
ஜ்ஜ்ப்ரீமியம் கார்டுகளுக்கு: விஸ்தாரா இன்ஃபினிட், ரிஸர்வ், செலக்ட், அட்லஸ், மைல்ஸ் & மோர் வேர்ல்ட் செலக்ட் and இன்ஃபினிட், தயவு செய்து தொடர்பு கொள்ளவும்: 1800 419 0065

+91 - 22-27648000 என்ற எண்ணை இந்தியாவிற்கு வெளியில் இருந்து அணுகலாம்.

மின்னஞ்சல் ID: axisbank.com/support
ACE கிரெடிட் கார்டுகளுக்கான மின்னஞ்சல் ID: service.acecard@axisbank.com

LIC கார்டுகளுக்கு: 1800 419 0064
மின்னஞ்சல் ID: liccards@axisbank.com

**குறை தீர்த்தல்/ மேலதிகாரியிடம் பிரச்சனையை எழுப்புதல்**

பெறுநர்,

திரு. சீஸர் பிண்ட்டோ, நோடல் ஆபீசர்

ஆக்சிஸ் பேங்க் லிட்., NPC1, 5வது மாடி, "கிகாப்ளெக்ஸ்", ப்ளாட் எண் I.T.5, MIDC, ஐரோலி நாலெட்ஜ் பார்க், ஐரோலி, நவி மும்பை - 400 708. மின்னஞ்சல் ID: nodal.officer@axisbank.com, தொலைபேசி 91-080-61865200. நேரம்: காலை 9:30 முதல் மாலை 5:30 மணி வரை (திங்கள் முதல் வெள்ளி வரை)

காலை 9:30 முதல் பிற்பகல் 2:00 மணி வரை (சனிக்கிழமை) வங்கி விடுமுறை நாட்களைத் தவிர.